# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2290/24 - 2022 ජූලි මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.07.28

*2290/24 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச்சட்டம்**

*மதுவரி அறிவித்தல் இல. 05/2022*

**மென் மதுபான உரிமங்கள்**

*மதுவரி கட்டளைச்சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 25 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 32 ஆம் பிரிவின் மூலம் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், மதுவரி கட்டளைச்சட்டத்தின் 7(அ) பிரிவின் படி மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் கீழ், சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்குத் தேவையான நெகிழ்வான மூலோபாய அணுகுமுறையாக, உணவு மற்றும் பானங்களை வழங்கும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் தொடர்பாக, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் இனங்காணப்பட்டுள்ள சுற்றுலா வலயங்களில் தங்குமிடம் மற்றும் சேவைகளை வழங்கும் சுற்றுலா நிறுவனங்களுக்கு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளின் கீழ் உவைன் மற்றும் பியர் (மென்மையான மதுபானம்) உட்பட புளிக்கவைக்கப்பட்ட மதுபானங்களை நுகர்வதற்கு மாத்திரம் அங்கீகாரம் வழங்க அதிகாரமளிக்கின்றேன்.*

*இந்த விதிகள் 2022, யூலை 28 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக்*
*கொள்கைகள் அமைச்சர்.*

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2022, யூலை 28.*


1A - PG 6048 — 406 (2022/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**விதிகள்**

1. மதுவரி கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 18 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள விதிகளைப் போலவே, இந்த உரிமம் தொடர்புடைய வளாகத்திற்குள் உவைன் மற்றும் பியர் (மென்மையான மதுபானம்) உட்பட புளிக்கவைக்கப்பட்ட மதுபானங்களைப் பயன்படுத்துவதற்கு மட்டுமே ஏற்புடையதாக்கப்பட்டு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

2. இவ் உரிமம் பொருந்தும் விடயங்கள் பின்வருமாறு ;

(அ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மற்றும் அதிகாரசபையால் பரிந்துரைக்கப்பட்ட, அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் :

(ஆ) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையால் அடையாளம் காணப்பட்ட சுற்றுலா வலயங்களில் அமைந்துள்ள, அதிகாரசபையால் பரிந்துரைக்கப்படும் உணவு மற்றும் பானங்கள் மற்றும் தங்குமிட வசதிகளை வழங்கும் சுற்றுலா நிறுவனங்கள்,

சம்பந்தப்பட்ட வளாகத்தில் மென்மையான மதுபானம் அருந்துவதற்கு மாத்திரம்.

3. விண்ணப்பிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட வளாகத்தின் அங்கீகரிக்கப்பட்ட எல்லையின் வரையறைகளுக்குள் மாத்திரம் மென்மையான மதுபானம் அருந்துவதற்கு அனுமதி வழங்கப்படும்.

4. 1987 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வியாபார நாமங்கள் சட்டத்தின் படி வியாபாரப் பதிவுக்கான செல்லுபடியாகும் சான்றிதழ் அல்லது ஒரு நிறுவனமாக இருந்தால், அனுமதிபெற்ற பத்திரத்துறை பதிவாளர் (நோட்டரி பப்ளிக்) ஒருவர் மூலம் சான்றளிக்கப்பட்ட நிறுவனப் பதிவுச் சான்றிதழானது சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக உணவு, பானங்கள் மற்றும் சேவைகள் வழங்குகின்ற விண்ணப்பிக்கும் இடத்திற்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும்.

5. கடந்த ஐந்து (5) ஆண்டுகளுக்குள் தண்டனைச் சட்டம் அல்லது மதுவரி கட்டளைச்சட்டம் அல்லது வேறு ஏதேனும் குணநலன் சார்ந்த குற்றத்திற்காக விண்ணப்பதாரர் தண்டிக்கப்படவில்லை என்று விண்ணப்பதாரரின் சத்தியப் பிரமாணத்துடன், உரிமம் பெற்ற வளாகம் அமைந்துள்ள பகுதியில் உள்ள காவல் நிலையத்தின் அதிகாரியிடம் இருந்து கடந்த ஐந்து (5) ஆண்டுகளுக்குள் தண்டனைச் சட்டம் அல்லது மதுவரி கட்டளைச்சட்டத்தின் கீழ் எந்த குற்றத்திலும் ஈடுபட்டதற்காகத் தண்டிக்கப்படவில்லை என்று பெறப்பட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

6. புதிய உரிமத்திற்கு விண்ணப்பிக்கும் போது அல்லது உரிமம் வைத்திருப்பவர் உரிமத்தைப் புதுப்பிக்க விண்ணப்பிக்கும் போது, மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாகிய ரூபா 5,000.00 செலுத்தப்பட்டு, பணம் செலுத்தியதற்கான ஆதாரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7. இதற்கான உரிமக் கட்டணம் அட்டவணை II இன் படி இருத்தல் வேண்டும் என்பதுடன் எந்த உரிமமும் அதிகபட்சமாக ஒரு பஞ்சாங்க வருடத்திற்கு செல்லுபடியாதல் வேண்டும். எவ்வாறாயினும், ஆண்டின் நடுப்பகுதியில் வழங்கப்பட்ட புதிய உரிமங்கள், அந்த ஆண்டிற்கான மீதமுள்ள காலத்திற்கு முழு உரிமக் கட்டணத்தையும் செலுத்தப்படும் பட்சத்தில் வழங்கப்படுதல் வேண்டும்.

8. அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர் அல்லாத பிறரிடம் மென்மையான மதுபானம் வாங்குவது தடைசெய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட வளாகத்திற்குள் கொண்டு வரப்பட்ட மற்றும் நுகரப்படும் மென்மையான மதுபானங்களின் கணக்குகள் மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படக்கூடிய படிவங்களில் பராமரிக்கப்படுதல் வேண்டும்.

9. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மதுவரி ஆணையாளர் நாயகத்தின் அனுமதியின்றி உரிமம் வழங்கப்பட்ட வளாகத்தின் உரிமையை மாற்றவோ அல்லது கைமாற்றவோ கூடாது. இலங்கை சுற்றலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மதுவரி ஆணையாளர் நாயகம் ஆகியோரின் அனுமதியைப் பெற்று பத்து இலட்சம் ரூபாவைச் செலுத்திய பின்னர் இத்தகைய மாற்றம் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

10. இந்த விதிகள் தொடங்கப்பட்ட நாளிலிருந்து, அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தின்படி தொடர்புடைய அங்கீகாரத்தினைப் பெற விரும்பும் அனைத்து நபர்களும் விண்ணப்பித்தல் வேண்டும் மேலும் மதுவரி ஆணையாளர் நாயகம் அந்தப் படிவத்தின் ஊடாக மாத்திரம் விசேட அனுமதியை வழங்குவார்.

11. ஏதேனும் முறைப்பாடு பெறப்படும் சந்தர்ப்பத்தில், அதற்கான அங்கீகாரம், மறுப்பு அல்லது இரத்து செய்தல் ஆகியவை விசாரணையொன்றிற்குப் பின்னர் மதுவரி ஆணையாளர் நாயகத்தின் அபிப்பிராயத்திற்கு உட்பட்டதாக அமையும்.

12. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மதுவரி ஆணையாளர் நாயகம் வகுத்துள்ள விதிகள் மீறப்பட்டால் மென் மதுபான பாவனைக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் இரத்துச் செய்யப்படும். மேலும், மதுவரி கட்டளைச்சட்டத்தின் வழிகாட்டுதல்களின்படி இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் மீறப்பட்டமை கண்டறியப்பட்டால், தொழில்நுட்ப குற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். வழங்கப்பட்ட அங்கீகாரத்தினை மதுவரி ஆணையாளர் நாயகத்தால் மாத்திரமே மாற்ற முடியும்.

13. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் ஹோட்டலுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் இரத்து செய்யப்பட்டால், மதுபானம் பயன்படுத்துவதற்கு மதுவரி ஆணையாளர் நாயகம் வழங்கிய அங்கீகாரம் தானாகவே இரத்து செய்யப்படும்.

14. அனைத்து பௌர்ணமி போயா நாட்களிலும் மென்மையான மதுபானம் வழங்கப்படுதல் கூடாது.

## அட்டவணை I

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட தங்குமிடங்கள் மற்றும் சேவைகளை வழங்கும் சுற்றுலா நிறுவனங்கள்

| விடய இல. | சுற்றுலா நிறுவனத்தின் வகை | தங்குமிடங்கள் மற்றும் சேவை வசதிகளை வழங்கும் சுற்றுலா நிறுவனங்கள் |
|---|---|---|
| 1 | தங்குமிடங்களின் வகை | வகைப்படுத்தப்பட்ட சுற்றுலா ஹோட்டல் |
| 2 | | சிறு கடைகளைக் கொண்ட ஹோட்டல் |
| 3 | | சிறு கடைகளைக் கொண்ட வில்லாக்கள் |
| 4 | | இயற்கைச் சூழலிலமைந்த தங்குமிடம் (எக்கோ லொட்ஜ்) |
| 5 | | பாரம்பரிய ஹோட்டல் |
| 6 | | சுற்றுலா ஹோட்டல் |
| 7 | | விருந்தினர் இல்லம் |
| 8 | | சுற்றுலா விடுதி |
| 9 | | இல்ல விடுதி (ஹோம் ஸ்ரே) |
| 10 | | பங்களா |
| 11 | | பாரம்பரிய பங்களா |
| 12 | | பாரம்பரிய இல்லம் |
| 13 | | முகாமிடல் பகுதி |
| 14 | | கருப்பொருளிலான தங்குமிடம் (தீம்ட் அக்கமடேஷன்) |
| 15 | | சுற்றுலா தொடர்மாடி ஹோட்டல் |
| 16 | சேவை வகை | உணவகங்கள் |
| 17 | | பூட் கோட் |
| 18 | | சுற்றுலா நட்புறவுள்ள உண்ணும் இடங்கள் |

## அட்டவணை II - உரிமக் கட்டணம்

வளாகத்திற்குள் மென்மையான மதுபானங்களை மாத்திரம் நுகர்வதற்கு இந்த மதுவரி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்டுள்ள விதிகளின்படி உரிமம் வழங்குவதற்கான கட்டணம்

| உரிமம் | ஆண்டுக் கட்டணம் |
|---|---|
| மென் மதுபான உரிமம் | ரூபா. 25,000.00 |

### அட்டவணை III - உரிமம் வழங்குவதற்கான படிவம்

வளாகத்திற்குள் மென்மையான மதுபானங்களை மாத்திரம் நுகர்வதற்கு இந்த மதுவரி அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்டுள்ள விதிகளின்படி உரிமம் வழங்குவதற்கான படிவம்

### இலங்கை மதுவரி திணைக்களம்

(1) மாவட்டம் : ........................................................... அங்கீகார இல. : ................................

வழங்கப்பட்ட திகதி : ............................................... காலாவதியாகும் திகதி : .......................

சுற்றுலா நிறுவனத்தின் வகை : ..........................................................................................

அங்கீகாரக் கட்டணம் : ...................................................................................................

முத்திரைக் கட்டணம் : ...................................................................................................

(2) சுற்றுலா நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி :

.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................
.....................................................................................................................................

(3) மதுவரி கட்டளைச் சட்டத்தின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், மேற்குறிப்பிட்ட சுற்றுலா நிறுவனத்தில் மாத்திரம் மதுபானம் அருந்துவதற்கு நான் இதன்மூலம் அங்கீகாரம் வழங்குகிறேன்.

திகதி : ............................................ ............................................
மதுவரி ஆணையாளர் நாயகம்

பிரதிகள் :

1. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
2. உதவி மதுவரி ஆணையாளர் (............................................ மாகாணம்)
3. மதுவரி அத்தியட்சகர் (............................................)
4. மதுவரி பொறுப்பதிகாரி (............................................)

EOG 11 - 0172

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.